**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 329/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 6 |
| Name : | மருத்துவர் பூசனா |
| Father's/Husband Name: | செந்தில்வேல் |
| Village : | பெரம்பலூர் அரசு மருத்துவமனை |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 44/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 1 ஆஜர் எதிரிகள் 2 முதல் 4 வரை ஆஜர் இல்லை. அவருக்கு 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்துள்ளார்)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது பெரம்பலூர் தலைமை அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 15.08.2022 அன்று இரவு 7.50 மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது பிரான்ஸிஸ்(72) என்பவரை செபஸ்டியன் என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்த போது அடையாளம் தெரிந்த 2 ஆண், 2 பெண் நபர்கள் இரும்பு கம்பி, கல் ஆகியவற்றை கொண்டு மாலை 6 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தாக்கப்பட்டதாக என்னிடம் கூறினார். அவரை உள் நோயாளியாக அனுமதித்து, சிகிச்சை வழங்கினேன். அவருக்கு முகத்தின் வலது பக்கத்தில் 0.5x0.7 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வலது பக்க மூக்கில் கன்றி போன காயம் இருந்தது. இடது தோள் பட்டையில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு முகத்திற்கு CT Scan மற்றும் வலது தோள்பட்டை எலும்பிற்கு எக்ஸ்ரே

எடுக்கப்பட்டது. எலும்பு முறிவு மருத்துவர் அவருக்கு எந்த நன்றாக இருந்தது என்று சான்று அளித்தார். காது மூக்கு தொண்டை மருத்துவர் மூக்கு எலும்பில் முறிவு இருப்பதாக சான்று அளித்துள்ளார். இதனடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் கொடுங்காயம் எனவும், 3வது காயம் சாதாரண காயம் என நான் சான்றளித்தேன். நான் பிரான்சஸ் என்ற நபருக்கு வழங்கிய **விபத்து பதிவேட்டின் நகல் அ.சா.ஆ4 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட பிரான்சிஸ் என்ற நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த நபரை கல் மற்றும் இரும்பு கம்பியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளது.

கடந்த 15.08.2022 அன்று இரவு 7.45 மணியளவில் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது பிலோமினா(வயது 70) என்பவரை செபஸ்டியன் என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். அவரை நான் விசாரித்த போது அடையாளம் தெரிந்த 2 ஆண், 2 பெண் நபர்கள் இரும்பு கம்பி மற்றும் அரிவாள் ஆகியவற்றை கொண்டு மாலை 6 மணியளவில் அவரது வீட்டில் வைத்து தாக்கப்பட்டதாக என்னிடம் கூறினார். அவரை உள் நோயாளியாக அனுமதித்து, சிகிச்சை வழங்கினேன். அவரை பரிசோதித்த போது தலையின் வலது பக்கத்தில் பிரைட்டல் பகுதியில் 4x1x0.7 செ.மீ அளவுள்ள சிதைவுற்ற காயம் காணப்பட்டது. அவருக்கு தலைக்கு CT Scan எடுக்கப்பட்டது. CT Scanல் ஏற்கனவே ஏற்பட்ட காயத்தின் தடயம் மட்டுமே காணப்பட்டது. புதிதாக காயம் எதுவும் காணப்படவில்லை. நான் பிலோமினோல் என்ற நபருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாரண காயம் என நான் சான்றளித்தேன். நான் பிலோமினால் என்ற நபருக்கு வழங்கிய **விபத்து பதிவேட்டின் நகல் அ.சா.ஆ6 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட பிலோமினால் என்ற நபருக்கு ஏற்பட்ட காயங்கள் அந்த நபரை இரும்பு கம்பியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிகிச்சை அளித்த 2 நபர்களும் வீட்டில் இருக்கும்போது தாக்கி காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். 6 மணிக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றாலும், அந்த காயம் 6 மணிக்கு முன்பாகவோ அல்லது அதற்கு பின்பாகவோ ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. 2 நபர்களுக்கும் சிகிச்சையில் CT

Scan மற்றும் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த CT Scan மற்றும் எக்ஸ்ரே–வை போலிசாரிடம் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரான்ஸிஸ்க்கு ஏற்பட்ட 3வது காயம் தோள்பட்டையில் வலி இருப்பதாக சொன்னார் என்றால் சரிதான். அவ்வாறு வலி இருப்பதாக காயம் ஏற்பட்டவர் சொல்லி தான் தெரிந்து கொள்ள முடியும் என்றாலும் மருத்துவ ரீதியாக அதை தெரிந்து கொள்ள முடியாது என்றாலும் சரிதான். அவருக்கு ஏற்பட்ட முதலாவது காயம் முகத்தில் ஏற்பட்டது என்றாலும், முகத்தில் எலும்பு முறிவு ஏதும் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல, மூக்கில் ஏற்பட்ட காயமானது முகத்தில் ஏற்பட்ட காயத்தின் தொடர்ச்சி தான். முகத்தில் ஏற்பட்ட காயத்தின் தொடர்ச்சி தான் மூக்கில் ஏற்பட்ட காயம் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசார் அது குறித்து என்னை விசாரிக்கவில்லை அதனால் நான் குறிப்பிடவில்லை. முகத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மூக்கில் காயம் ஏற்பட்டதா அல்லது மூக்கில் ஏற்பட்ட காயத்திற்காக முகத்தில் காயம் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியாது.

பிலோமினாவிற்கு தலையில் ஏற்பட்ட காயம் பழைய காயம் அது புது காயம் இல்லை என்றால் 15.08.2022 அன்று ஏற்பட்ட காயம் புதிய காயம் தான் அதற்காக எடுக்கப்பட்ட சிடிஸ்கேன் ரிப்போர்ட்டின் பதிவு பழைய காயத்திற்கான தடயம் தான் புதிய காயத்திற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. அருவாள், இரும்பு கம்பி ஆகியவை விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் ஆயுதம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரான்ஸிஸ்க்கு ஏற்பட்ட வலது பக்க கன்னத்திலும், மூக்கிலும் ஏற்பட்ட காயங்களும் மற்றும் பிலோமினாவிற்கு ஏற்பட்ட காயங்களும் இரு சக்கர வாகனத்திலிருந்து தவறி விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.